# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1875/29 - 2014 අගෝස්තු මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2014.08.14

*1875/29 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

*2014, ஓகத்து 05.*

கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச்சட்டம் 2014 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பட்டப்பின் ஆங்கில நிறுவக (திருத்தக்) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், 2014, ஓகத்து மாதம் 05 ஆந் திகதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்.

2. 2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதிய 1417/12 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2005 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, பட்டப்பின் ஆங்கில நிறுவகக் கட்டளைச் சட்டம் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் 4 ஆம் பந்தியில் -

(i) அப்பந்தியின் (இ) என்னும் உட்பந்தியில் "ஆங்கிலத்தில்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "ஆங்கிலத்தில்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(ii) அப்பந்தியின் (உ) என்னும் உட்பந்தியில் "கல்விச் சிறப்புக்களையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கல்விச் சிறப்புக்களையும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(iii) அப்பந்தியின் (ஊ) என்னும் உட்பந்தியில் "நிறுவனங்களுடனும்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "நிறுவனங்களுடனும்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(iv) அப்பந்தியின் (ங) என்னும் பந்தியில் "பணிகளுக்கும்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "பணிகளுக்கும்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்.